**OPEN ACCESS**

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.2.2020

Accepted: 4.3.2020

Published: 01.04.2020

Citation:
Sudhakar, K. (2020). Maariyamman Vazhipaadu Kannaki Vazhipaadu. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 63–78.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2398

*Corresponding Author:
ksivasudhakar1981@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Maariyamman Vazhipaadu Kannaki Vazhipaadu

**Dr. K. Sudhakar***
*Assistant Professor in Tamil, D.G.Vaishnav College*
*Chennai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-9166-9145

**Abstract –** It is said that in Silappathikaram, the Paththini goddess Kannaki had made a pilgrimage to a temple in many countries. After worshipping Kannaki, it was rain-filled, the poorness and the diseases were not there. The purpose of this article is to bring out that Kannagi temple, which had been raised for rain in that period, is now changed to Mariamman temples. Neem leaves are very special term for Mariamman. Tuesdays, Fridays and Sundays are the best times to worship this Amman. They make pongal, the lamp and the tender coconut, to worship Mariamman. They will also walk in fire, take kavadi etc to worship Mariammam. Walking in fire will make you remember about the fire in Madurai. To explain that Kannaki is Mariamman, I am going to show a few sub titles.

1. Vengaiyum Vembum
2. Silambum Pongal Vaithalum
3. Kannakiyum mazhaiyum

This can be understood by the way Mariamman is worshipped as a symbol of the Tamil culture and the Tamil worship of Kannagi. The worship of Mariamman is not the worship of the Renuka, but the spread of the Veidic religion and the attempt to link the worship of Mariamman to their religion. Lord Kannagi is worshipped as Bhagavathi Amman in Kerala. Now in Tamilnadu, Kannaki has been changed to Mariamman.

**Key Words:** Folklore, Tamil epic, Silapathikaram, Folk deity, Kannagi worship, Mariyamman worship, Comparative Study.

## References

1. Abdul Cader. (2006). *Ayal makarantha seerkkai*. puthiya kaatru (monthly magazine), July.
2. Aravindan. (1977). *Tamilaga Nattupadalkal* First edition. Chennai. Lakshmi Publishing Corporation.
3. Arumugam. (2008). *Gana- kannaki paththathiyum paadalkalum.* Sri Lanka San Press, IruthayaPuram, Batticaloa, version
4. Ramasamy. (1987). *Tulasi- Mangaladevi kannagi koottam* First edition. World Tamil Research Institute, Chennai.
5. yar, Sg. (1986). *Thirunelveli paguthiyil sirudeiva vazhipaadu* First edition, Kamaraj University, Madurai,
6. Kandaiah, vC. (1968). *Kannagi, vazakkurai*, Karaithivu Hindu Religious Development Association, KARAITHIVU, Batticaloa, Sri Lanka.
7. *Encyclopedia* (1956). *(vol. 8)* First edition. Tamil Development Corporation, Chennai.

8. Kanagarathinam. (1984). *Izhanattil Kannagi vazhipaadu,* Tamilology (vol. 25), Chennai, World Tamil Research Institute
9. Kailasapathi. (1966). *Pandaiya thamizhar vaazvum vzhipaadum* First edition. Chennai, Pary published.
10. Kailasapathi. (2001). *Adiyum mudiyum* Second edition. Chennai, Kumaran Publications.
11. Kovintharaasanar, C.Version: (1991). *Kanniyar Adichuvattil,* Kamaraj University, Madurai.
12. Santhana Naalingam. (2007). *Ilankovin Pathini Deiva padaippu* First edition. Gandalagam, Chennai.
13. Chandran (Jayamohan in Tamil). (2005). *kodungkoolur Kaminski* First edition. United Rights, Chennai.
14. Sarala Rajagopalan. (2003). *Kannagi vazhipadu* First edition. Chennai, Oli publications.
15. Saminathaiyar. UVe. (1944). *Silappadharam* Fourth edition. Chennai, Kabir Press.
16. Sivagnanam. (1958). *Veerak Kannagi*, first edition, Inba, Chennai.
17. Senniyappan. edition: (2012). *Gongunaattil Kannagi vazhipaadu*. Net articles.
18. Sendurai Muthu. (1977). *Silamil Makkal kural* first edition. Chennai, Nalvaazhvu publication.
19. Somale. (1975). *The tradition and culture of the people of Tamil Nadu* first edition. National Book Trust, India,
20. Dasharathan, B. (2006). *Mariamman Kathaipaadal* second edition. Tamil Manuscripts Security Centre, Chennai,
21. *Tamil Lecturer Vol. 5*, university of Madras, Chennai, Version-(1982).
22. BhakthaVyasalabharathy. Oct. (2011). *Yazhppaanaththu Ninaivukal*. kaalasuvadu.
23. Bageerathan. *Shakti vazhipaadu.* (1998). first edition. Chennai, Vaanathi Publishing Corporation.
24. Padmanabhan. March. (2005). *Kerala Kannagi temples,* University of Kerala, Seminar.
25. Myilvaanam Ragunathan. (2006). *Kovalan Drama (Mulaimomodi)* first edition. SSR printers, jafna.
26. Vadivelan. (2002). *Perodu Mariamman selliyamman theiva maalai* first edition. Amudha nilaiyam, Erode.

# மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடே

*முனைவர் கு. சுதாகர்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, து.கோ.வைணவ கல்லூரி, அரும்பாக்கம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்*** – *தமிழ்ச் சமூகத்தில் பெண்தெய்வ வழிபாடு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. சங்க இலக்கியத்தில் கானமர் செல்வி, கடல் கெழு செல்வி என்றெல்லாம் வழிபடப்பட்டதை அறிகிறோம். சிலப்பதிகாரத்திலே பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குப் பல நாடுகளில் கோயிலமைத்து விழாவொடு சாந்தி செய்தனர் அதனால் மழைவளங் கூர்ந்து, வறுமை எய்தி, வெப்பு நோயும் குருவும் தொடர வருந்தியிருந்த நாடு மலிய, மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கின. அக்காலத்தில் மழைவேண்டி எழுப்பப்பட்ட கண்ணகி கோயில்களே நாளடைவில் மாரியம்மன் கோயில்களாக மாறிப் போயிருக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் கருதுகோள். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் உரைபெறு கட்டுரையின் வழி மாரியம்மன் வழிபாட்டின் நிலையும் வேம்பினோடு தொடர்புடைய கண்ணகி கோயில்களையும் பொங்கல் வைத்தல் சடங்கு மற்றும் தீமிதித்தல் நிகழ்வுகளோடு ஒப்பிட்டும் ஆராய்வதின் ஊடாக கண்ணகிக்கும் மழைக்கும் (மாரி) உள்ள தொடர்பு விவரிக்கப்படுகிறது. தமிழகம், கேரளம், ஈழம் உள்ளிட்ட நிலப்பரப்புகளில் வழங்கப்படும் கண்ணகி வழிபாட்டின் வழி மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடே என்பதைக் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், சிலப்பதிகாரம், நாட்டார் தெய்வம், மாரியம்மன் வழிபாடு, சமயச் சடங்குகள், ஒப்பியல் ஆய்வு*

உலகில் தோன்றிய எந்தவொரு இனக்குழுக்களும் ஆரம்ப காலங்களில் இயற்கையையே வழிபடத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து மக்கள் இனப்பெருக்கத்திற்கு மூலசக்தியாக இருக்கும் பெண்ணை வழிபடத் தொடங்கினர். ஆதிகாலத்தில் பெண்களிடமே அதிகாரம் இருந்துள்ளது. வேட்டையாடுதலில் பெண்கள் பெரும்பங்கு வகித்துள்ளனர். தமிழர் மரபிலும் தாய்தெய்வமாகவும், பிற வடிவங்களிலும் பெண்ணைப் போற்றி வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பெண் தெய்வ வழிபாடு தோன்றியதற்குச் சமுதாயத்தில் தாய்வழி முறை நிலவியதே காரணமெனக் கே.நீலகண்ட சாஸ்திரி கூறும் கருத்தைக் க.கைலாசபதி (1966:2) எடுத்துக் காட்டுகின்றார்.

தெய்வங்களில் பெண் தெய்வங்களே உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து வணங்கப்பட்டன. இனக்குழு வாழ்க்கையில் குலத்தில் பெண்ணே தாயாகவும், தலைவியாகவும் இருக்கிறாள். இந்த நிலையில் சமுதாயத்தில் தாய்த்தெய்வம் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகத் தலைமை பெறுகிறது. ஆண் தெய்வங்களைவிட, பெண் தெய்வம் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுகிறது என ஸ்டார்பிரச் (2008:83) கூறுவதாக நா.வானமாமலை குறிப்பிடுகின்றார். கொற்றவை, காளி, கண்ணகி, மாரியம்மன் எனப் பல பெயர்களில் வழங்கப்படும் தாய்த் தெய்வங்கள் இன்றும் தனித்துவம்பெற்று வழங்கி வருவதைக் காண்கிறோம்.

சங்க இலக்கியங்களில் பெண் தெய்வங்கள் பழைமையானவை என்பதை முதியோள், பழையோள், காடுகிழாள் என இடம்பெறும் பெயர்களைச் சுட்டிக் காட்டி, கொற்றவைத் தாய்வழிச் சமுகத்தின் தொடர்ச்சியாகவே காட்டுவதையும் காணலாம். காட்டில் உறையும் தெய்வத்தைக் கானமர்ச்செல்வி (அகம்:345) என்றும், துணங்கை அம்செல்வி (பெரும்பாண்:459) எனவும், கடலில் வாழும் தெய்வமாகக் கடல்கெழு செல்வி (அகம்:370) மணி மேகலாதெய்வம் (மணி:5:93) என்றும் வழங்கப்படுவதை இலக்கியங்கள் வழி அறியலாம்.

பெண் தெய்வ வழிபாட்டின் முந்தைய வடிவமாகத் திருமாவுண்ணி கதை அமைந்திருப்பதாகப் பெ.மாதையன் (2001: 172) குறிப்பிடுகின்றார். இக்கதை கண்ணகி கதையைக் கூறுவதாகவும் இக்கண்ணகி மக்களால் வழிபட்ட முறைமை அறிந்து கொள்வதும் அவசியமாகும்.

சங்க காலத்தில் பெண் தெய்வத்தைச் செல்வி என்று அழைத்திருப்பதைப் பார்க்கின்றோம். சிலப்பதிகாரத்தில் காடு காண் காதையில் இடம்பெறும் வேட்டுவவரியில் சாலினி எனும் பெண் மீது தெய்வமேறி ஆடும்போது கண்ணகியைப் பார்த்து,

> **இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி**
> **தென்தமிழ்பாவை செய்தவக் கொழுந்து**
> **ஒருமா மணியால் உலகிற் லோங்கிய**
> **திருமா மணியென**
> **(சிலம்பு:12:47-50)**

குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். செல்வி என்பதே காலப்போக்கில் செல்லி என்று மருவியது. செல்லியம்மன் என்பதும் தாய்தெய்வமாகும். செல்லி என்பதற்கு மற்றொரு பொருள் மழை என்றும் பொருள் படும். செல்லியம்மனும் மழைத்தெய்வமாக வழங்கப்பட்டாள் என்று இரா. வடிவேலன் குறிப்பிடுகின்றார். மேலும் நாட்டரசன் கோட்டை கண்ணாத்தாள், காரைக்குடி கொப்புடையம்மன், நெல்வேலி மாகாளி. திருவாமுர் அம்மன், திருவொற்றியூர் அம்மன் முதலியவை இன்றும் மக்களால் வழிபட்டு வரும் புகழ்பெற்ற தாய் தெய்வங்கள் (2002:40) என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இவ்வம்மன் வழிபாடுகள் கண்ணகி வழிபாட்டின் மாற்றுவடிவமே என்பதற்குத் திருவொற்றியூரில் உள்ள வட்டபுரியம்மன் வழிபாடே சான்றாக அமைகின்றது.

கண்ணகி வழிபாடு வட்டபுரியம்மனாக மாற்றம் கண்டதில் புகழேந்திப் புலவரின் கோவலன் கதையே மூலமாக அமைகின்றது. மதுரையை எரித்த கண்ணகி, கேரளம் சென்று பகவதியாகச் சில காலம் இருக்கின்றாள். அங்கும் இருக்க பிடிக்காமல் திருவொற்றியூர் வந்து தியாகேசரிடம் தாகத்திற்கு தண்ணீர் கேட்கின்றாள். ஆழ்ச் சுனையில் இறங்கி அள்ளிக் குடிக்குமாறு கூறுகின்றார். கண்ணகி இறங்கியதைக் கண்டு தியாகர் (சிவன்) பாறை போட்டு மூடுகின்றார். நம்பூரிமார் வீதி, பூந்தோட்டம், காசி குளம்பேடு முதலிய இடங்களில் காளி (கண்ணகி) எழ முயன்று முடியாமல் தியாகேசர் இங்கேயே இருந்துவிடு, சித்திரை மாதத்திலே சிறப்பான பூசை உனக்குத் தருகின்றேன் என்று கூறுவதாகவும் அதற்கு சம்மதித்த கண்ணகி,

> **எட்டுக்குட்டி எட்டுப்பெட்டை எட்டு முட்டை எட்டுச்சட்டி**
> **கம்மாளர் பலியெனக்குக் கடவுளே தரவேண்டும்**
> **வருஷசத்துக்கோர் பலிவகையாய்க் கொடுக்கவேண்டும் (பு.கோ.க:91)**

என்று உயிர்பலி கேட்கின்றாள். வட்டபுரியம்மன் என்ற பெயரும் பெறுகின்றாள் காளி பலி வாங்கிக் கொண்டிருக்கும் நாளில்

ஒரு வயது ஆன கம்மாளக் குழந்தையொன்று பத்துப்பதிகம் பாட உடனே காளிக்குக் கங்கையாகப் பால் சுரக்கிறது. அதிலிருந்து இன்று முதல் எனக்கு மனிதபலி வேண்டாம். எருமைக் கடா தந்தால் இன்பமாய் நான் கொள்வேன் என்று கூறியதாகவும் அதன் பின்னர் விலங்குகளையே பலியிட்டனர் என்று குறிப்பிடுகின்றன.

திருவொற்றியூரில் வட்டபுரியம்மனுக்கு நடக்கும் பதினைந்து நாள் விழாவில் இறுதி நாளன்று கண்ணகி மதுரையை எரித்த நிகழ்ச்சியை நினைவூட்டுவதாகப் பொய்ப் பந்தலொன்று அமைத்து அதனை எரியூட் டுவதாக உள்ள நிகழ்வு இக்கோயிலைக் கண்ணகிக்கு உரியதாக்குகின்றன(1987:76) என்று துளசி.இராமசாமி குறிப்பிடுக்கிறார்.

திருவொற்றியூரில் உள்ள வட்டபுரியம்மன் கண்ணகியே என்று குறிப்பிடுவது இருபதாம் நூற்றாண்டுகளில் உருப்பெற்றவையன்று. கண்ணகி கதை கதைப்பாடல்களாக எழுந்த போது புகழேந்திப்புலவரால் எழுதப்பெற்ற கோவலன் கதையில் கண்ணகியே வட்ட புரியம்மனாக இருப்பதாகக் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது. கண்ணகி வழிபாட்டைச் சைவ சமயத்தோடு இணைக்கும் முயற்சி காலந்தோறும் நடந்து வருகின்றது என்பதற்குக் கதைப்பாடல்களாக அமைந்திருக்கும் கண்ணகி கதைகளில் சொக்கர்-மீனாட்சியின் முக்கியத்துவமும் கண்ணகியின் பிறப்பே சைவ சமயத்தின் பின்னணியைக் கொண்டிருப்பதாக அமைந்திருப்பதும் காண முடிகின்றது. கண்ணகி, சிவனிடத்தில் வேண்டி நிறபதாகவும் பின்னர் கண்ணகி வட்டபுரியம்மனாகப் பெயர்மாற்றம் பெறுவதும் கவனிக்கப்பட வேண்டியவை. கண்ணகி வழிபாட்டில் பலிபெறும் சடங்கினைச் சிலப்பதிகாரத்தில் வெற்றிவேற் செழியனால் ஆயிரம் பொற்கொல்லர் பலியிடப்பட்டதைத் தொடர்ந்து புகழேந்திப் புலவரின் கோவிலன் கதையிலும் வட்டபுரியம்மனாகக் கண்ணகி மாற்றப்பட்ட பின்னரும் கம்மாளர் இனத்தைச் சேர்ந்தவரைப் பலிபெற்று வந்ததாகக் கூறப் படுவதிலிருந்து சிலம்பின் தொடர்ச்சியைக் காணலாம். தமிழகத்தில் கண்ணகி கதைப் பாடல்கள் வெவ்வேறு இடங்களில் கிடைப்படும்போது கண்ணகி வழிபாடு மட்டும் எவ்வாறு இல்லாமல் போனது என்பது சிந்தனைக்குரியது. கண்ணகிக்கும் மாரியம்மனுக்கும் உள்ள தொடர்பைக் காணும் முன் மழைக்குரிய தெய்வமாகத் தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் மாரியம்மன் குறித்து அறிந்துகொள்வது அவசியமாகும்.

தமிழ்ச் சமூகத்தில் பழங்காலம் தொட்டே மழையைக் குறிக்க மாரி எனும் சொல் வழக்கத்தில் இருந்து வருவதைப் பார்க்கின்றோம். மாரி என்பதற்கு மழை என்பது பொருள். மேலும் வைசூரிக்குரிய தேவதை, துர்க்கை என்றும் பொருள் எனத் தமிழ் லெக்சிகன் (தொகுதி:5:பக்:3175) குறிப்பிடுகின்றது. மழை என்பது குளிர்ச்சி பொருந்தியது என்று ஆ.தசரதன் (1996: முன்:1) குறிப்பிடுகின்றார். மாரி என்ற பொருள் மழை என்பதைக் குறிப்பதோடு வெப்பத்தைத் தணிவித்து வெப்ப நோய்களாகிய அம்மை, வறட்சி முதலியவற்றைத் தீர்த்து நாடு தழைக்கச் செய்தும் மாடு பிழைக்கச் செய்தும் மக்களை மழைப்போல காப்பவள் இந்தத் தெய்வம் என்று கலைக்களஞ்சியம் (ப:246) குறிப்பிடுகின்றது. மழையினைப் பெண்களோடு தொடர்புப்படுத்தி உள்ளமையை கலித்தொகையிலும்(16:20) திருக்குறளிலும் (55) இடம்பெறுவதைப் பார்கின்றோம்.

மழை என்பது குளிர்ச்சி பொருந்தியது என்றும் அம்மை என்றால் அம்மா அல்லது அம்மைநோய் என்பது பொருள். அம்மை நோய் வெம்மைத்தன்மையால் ஏற்படுவது. எனவே மாரியம்மை குளிர்ச்சியைத் தருகின்ற தெய்வம். ஆதலால் வெப்பத்தால் ஏற்படும் வறட்சிக்குப்பின் மழையைத் தந்து செழிக்கச் செய்பவள் என மக்கள்

நம்புகின்றனர். கிராமப்புறங்களில் இந்த அடிப்படையில்தான் மாரியம்மன் கோயில்கள் அமைந்துள்ளன என்றும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு முதல் மாரியம்மன் தமிழ்நாட்டில் வணங்கப்பெற்று வருகின்றாள் என எம். ஆரோக்கியசாமி குறிப்பிடுவதையும் காணலாம். கண்ணகியைக் கருத்தில்கொண்டே இக்கருத்தை முன்வைக்கின்றார் என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது. மாரியம்மனைக் கண்ணகியோடு கூறுவதோடு மட்டுமின்றி மாரியம்மன் குறித்து வழங்கிவரும் வேறுபல பெயர்களையும் கதைகளையும் அறிந்துகொள்வதும் அவசியமானதொன்று.

### மாரியம்மன் பெயர்கள்

மாரியம்மனுக்கு ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு பெயர் வழங்கப்படுகின்றது. அம்மை, முத்தை விதைப்பவள் என்பதால் முத்துமாரி என்றும், கருமை நிறத்தினள் என்பதால் கருமாரி என்றும், சந்தனத்தால் மாரியம்மன் உருவம் செய்து வழிபடுவதாலும் சந்தனம் போன்று குளிர்ச்சியும் மணமும் உடையவள் என்பதால் சந்தனமாரி எனவும் கூறப்படுகிறாள். மேலும் கௌமாரி, கோட்டைமாரி எனவும் வழங்கப்படுகின்றன.

ஊர்ப்பெயர்களின் அடிப்படையிலும் மாரியம்மன் சிறப்புப் பெற்றிருப்பதை, இருக்கன்குடி மாரி, கன்னூர் மாரி (அ) சமயபுரம் மாரி, புதுக்கோட்டை மாரி, மதுரை மாரி, துலுக்காணத்து மாரி, மலையாள மாரி, விடாலபுர மாரி, கடும்பாடி மாரி, ஊத்துக்காட்டு மாரி, படவேட்டு மாரி, பெரியபாளையத்து மாரி, கோவியனூர் மாரி, வீராம்பட்டண மாரி, காசிவளநாட்டு மாரி, கொளாநல்லி கோட்டை மாரி, பண்ணாரி மாரி, திருவேற்காடு கருமாரி, திருவம்பட்டுமாரி எனச் சிறப்பாக ஊர்ப்பெயரால் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்திலே பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குப் பல நாடுகளில் கோயிலமைத்து விழாவோடு சாந்தி செய்தனர் என்றும் அதனால் மழைவளங்கூர்ந்து, வறுமை எய்தி, வெப்பு நோயும் குருவும் தொடர வருந்தியிருந்த நாடு மலிய, மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கியது என்றும் குறிப்பிடுகின்றது. அவ்வகையில் அக்காலத்தில் மழைவேண்டி எழுப்பப்பட்ட கண்ணகி கோயில்களே நாளடைவில் மாரியம்மன் கோயில்களாக மாறிப் போயிருக்க வேண்டும்.

மாரியம்மனுக்கு வேப்பிலை மிகவும் சிறப்பான அணிகலன். செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களும் தை, ஆடி ஆகிய மாதங்களும் இவ்வம்மனை வழிபட சிறப்பான காலங்களாகும். பொங்கல், மாவிளக்கு, இளநீர் முதலியவை வைத்து படைப்பதும் உயிர்ப்பலி இட்டு வந்ததும் உண்டு. காவடி எடுத்தும் கரகம் எடுத்தும் அலகு குத்துக்கொண்டு ஆடியும் தம் நேர்த்திக்கடன்களை மக்கள் செலுத்துவர். தீ மிதித்தலும் உண்டு. மாரியம்மனுக்கு வழங்கப்படும் பெயர்களைப் போன்றே கதைகள் வழங்கப்படுகின்றன.

### சிலம்பின் உரைபெறு கட்டுரையும் மாரியம்மனும்

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் உரை பெறு கட்டுரை எனும் பகுதியின் மூலமாகக் கண்ணகிவழிபாடுமாரியம்மன்வழிபாடாக எவ்வகையில் மாற்றம் அடைந்திருக்கின்றது என்பதை அறிந்துகொள்ளலாம். கண்ணகி மதுரையை எரித்துச் சேர நாட்டில் தெய்வமானாள். சேரனால் எழுப்பப்பட்ட கண்ணகி கோயிலுக்குப் பலநாட்டு மன்னர்களும் வந்து வழிபட்டுச் சென்றதுடன் தங்களது நாட்டிலும் கண்ணகி வழிபாட்டை ஏற்படுத்தினர் என்பதை அறிகின்றோம். பாண்டியன் வெற்றிவேற் செழியன் கண்ணகியை

வழிபட்டான் என்பதை, அன்றுதொட்டு பாண்டியன்நாடு மழைவரம்கூர்ந்து வறுமை எய்தி, வெப்புநோயும் குருவம் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று, களவேள்வியால் விழாவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது எனச் சிலம்பு (சிலம்பு;உரை.க) குறிப்பிடுகின்றது. வெற்றி வேற் செழியனால் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட விழாவே பிற்காலத்தில் மாரியம்மன் விழாவாகக் கொண்டாடப் படுவதாக அப்துல் காதர் (புதியகாற்று: ஜூலை:2006) குறிப்பிடுகின்றார்.

பாண்டியனைப் போன்றே கொங்கு நாட்டு மன்னர் இளங்கோசரும் கண்ணகி வழி பாட்டைத் தன் நாட்டில் ஏற்படுத்தினான் என்பதை,

> **அதுகேட்டு கொங்கு இளங்கோசர், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழ வொடு சாந்திசெய்ய மழை தொழில் என்றும் மாறாதாயிற்று**
> ***(சிலம்பு:உரை.க)***

எனக் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

கொங்குநாட்டில் வழங்கப்படும் மாரியம்மன் குறித்து குறிப்பிடும் ந.இரா.சென்னியப்பன், கொங்குநாட்டில் பெரும்பாலான ஊர்களில் மாரியம்மன் கோயில்கள் உள்ளன. கோவை மாநகரின் மையப்பகுதியில் உள்ள தண்டு மாரியம்மன் கோயில், கோவை மக்கள் அனைவரும் அறிவர். வறட்சியான கோடைக் காலங்களில் மழைவேண்டி மாரியம்மனுக்குத்திருவிழாநடத்தப்படுவது வழக்கமாக உள்ளது. இது ஆதியில் கண்ணகி வழிபாட்டை எடுத்துக் காட்டுகிறது. திருவிழாவின்போது கோயிலின் முன்புறத்தில் முக்கொம்புக் கம்பத்தில் பூவோட்டில் எரி வளர்ப்பதும் பக்தர்கள் பூவோட்டில் தீயேந்தி வலம்வருவதும் மதுரைக் கண்ணகி எரியூட்டியதைப் போற்றுவதாக இருக்கலாம் என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

கொங்கு மாவட்டத்தில் ஆலாந்துறைக்கு அருகில் உள்ள நாதகவுண்டன் புதூரிலிருந்து வடிவேலாம்பாளையம் செல்லும் சாலையில் மங்கலம்மன் கோயில் ஒன்று உள்ளது. இம்மங்கலம்மன் கண்ணகியே என்றும் கூறப்படுகிறது. இக்கோயில் திருவிழாவிற்கு நாதகவுண்டன் புதூருக்குத் தென்மேற்குப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் உச்சியிலுள்ள மங்கலம்மன் சோலை என்னும் அடர்ந்த காட்டிலிருந்துதான் கரகம் கொண்டு வருவார்கள். அதைக் கொண்டு வரும் உரிமை அப்பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்குரியது. ஆனால் கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக இக்கோயில் திருவிழா நடத்தப்படவில்லை. கண்ணகி மதுரையை எரித்த பின் மலையில் சென்று தெய்வமானாள் என்பதைச் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தில் குறைக்குரவையில் மலைவாழ் மக்கள் தெய்வங்கொள்ளுமின் சிறுகுடியீரே (சிலம்பு: 24:12) எனக் கண்ணகியைத் தெய்வமாக வழிபடத் தொடங்கியதாகக் கூறப்பட்டுள்ளதால் இம்மங்கலம்மன் வழிபாடு, கண்ணகி வழிபாடெனக் கொள்ளுவதற்குச் சான்றாக அமைகின்றது.

பாண்டியநாடு, கொங்குநாடு மட்டுமின்றி கண்ணகி பிறந்த நாடான சோழநாட்டிலும் கண்ணகிக்குக்கோயில்ஏற்படுத்தப்பட்டன. இதனை

> **அதுகேட்டு சோழன் பெருங்கிள்ளி கோழி அகத்து எத்திறத்தானும் வரம் தரும் இவள் ஓர் பத்தினிக் கோட்டம் சமைத்து நித்தல் விழா அணி நிகழ்வித்தோனே *(சிலம்பு:உரை.க)***

என்று குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். கண்ணகி வழிபாட்டை மூவேந்தர்களும்

தங்கள் நாட்டில் ஏற்படுத்தியதோடு அல்லாமல் தொடர்ந்து விழா எடுத்து வந்துள்ளனர். கண்ணகி வழிபாடு தமிழகமெங்கும் ஏற்படுத்தியதின் நோக்கமாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதின் காரணம் நாட்டில் மழையின்றி வறுமை ஏற்பட்டதாலும் வெப்பும் குருகும் மக்களுக்கு வந்து துன்பப்பட்டனர். அவற்றிலிருந்து விடுபடுவதற்கும் அதனைப் போக்கும் (வெப்பு, குருகு) சக்தியுள்ள தெய்வமாகவும் கண்ணகி பார்க்கப்பட்டாள். இன்றும் தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் மாரியம்மன் வழிபாட்டின் அடிப்படை மழைவேண்டிய வெப்புநோய் போக்கும் சக்தியாகவும் இருப்பதால்தான்.

கண்ணகி வழிபாடானது தமிழகத்தில் மட்டுமின்றி ஈழத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தது/பெற்றிருக்கிறது. சேரனால் கண்ணகிக்குக் கோயில் எழுப்பப்பட்ட போது அவ்விழாவிற்கு ஈழத்தில் இருந்து கயவாகு மன்னனும் வந்திருந்தான். கண்ணகிக்குக் கோயில் எழுப்பியதோடு கண்ணகி வழிபாட்டை ஈழம் முழுவதும் ஏற்படுத்தியதில் கயவாகுவிற்கு முக்கியப் பங்குண்டு. கண்ணகிக்குக் கோட்டம் அமைத்துவிழா எடுத்தபோது இலங்கையில் இருந்து கயவாகு வந்திருந்த நிகழ்வைச் சிலம்பின் உரைபெறு கட்டுரையிலும் வரந்தரு காதையிலும் காண்கிறோம். ஈழத்தில் கோயில் அமைத்து வழிபட்டதைக் குறிப்பிடும்போது,

> **கடல்சூழ் இலங்கை கயவாகு என்பான் நங்கைக்கு நாள்பலி-பீடிகைக் கோட்டம் முந்துறத்து ஆங்கு, அரந்தை கெடுத்து வரம் தரும் இவள் என ஆடித்திங்கள் அகவையின் ஆங்குஓர்பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்து வளம்பல பெருகி, பிழையா விளையுள் நாடு ஆயிற்று (சிலம்பு:உரை.க)**

எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. ஈழத்தில் கயவாகுவால் ஏற்படுத்தப்பட்ட கண்ணகி வழிபாடு, ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதையும், கண்ணகிக்கு ஆடிமாதத்தில் விழா எடுக்கப்பட்டதையும் அறிகின்றோம்.

கண்ணகியின் வாழ்வில் பெரிய மாறுதல்கள் நேர்ந்தது ஆடி மாதத்து வெள்ளிக்கிழமையாகும். இதனைச் சிலம்பில்,

> **ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்**
> **தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று**
> **வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண**
> **உரைசால்மதுரையோடரைசுகேடுறுமெனும்**
> **உரையு முண்டே**
> ***(சிலம்பு:23:133-137)***

என மதுராபுரித் தெய்வம் கூறுவதிலிருந்து மதுரையின் அழிவும் கண்ணகியின் தெய்வத்தன்மை வெளிப்பட்டதும் ஆடிமாதம் வெள்ளிக்கிழமை என்று அறிகின்றோம். ஆகையால் இன்றும் தமிழ்நாட்டு மாரியம்மன் கோயில்கள் பெரும்பான்மையானவற்றில் ஆடி மாதமும் அம்மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமையும் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. மாரியம்மனுக்கு நடைபெறும் விழாவில் சிலம்பைக் கையிலேந்தி ஆடும் நிகழ்வு முக்கியத்துவம் பெறுவதாக (2002:29) மு.வரதராசன் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் கண்ணகி வழிபாட்டில் பூசாரி சிலம்பைக் கையில் அணிந்துகொண்டு வேப்பிலையைக் கையில் ஏந்தியவாறு ஆடுவதை இன்றும் காண முடிகிறது.

### வேங்கையும் வேம்பும்

கண்ணகி, மதுரையை அழித்தபின் வேங்கை மரத்தடியில் நின்றாள். வானிலிருந்து தேவர்களோடு கோவலன் வந்தவுடன் அவர்களுடன் சென்றாள் என்று குறிப்பிடப்படுகின்றது. இதனைக்

***கான வேங்கைக் கிழோர் காரிகை***
***தான்முலை இழந்து தனித்துயர் எய்தி***
***(சிலம்பு:25:257-258)***

எனக் குறவர்கள் மன்னனிடத்தில் கூறுவதாக காண்கிறோம். கண்ணகிக்குச் சேரநாட்டில் கோயில் அமைத்து வேள்வியும் விழாவும் நாடெங்கும் நடைபெறுமாறு சேரன் கூறியபோது,

***மதுரை மூதூர் மாநகர் கேடுற***
***கொதியழல் சீற்றம் கொங்கையின் விளைத்து***
***நன்னாடு அணைந்து நளிர்சினை வேங்கைப்***
***பொன்னணி புதுநிழல் பொருந்திய***
***நங்கையை***
***(சிலம்பு:28:218-221)***

எனக் கண்ணகி தன் நாடு வந்துசேர்ந்த நிகழ்வைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வடிகளில் நளிர்சினை வேங்கை என்பதற்கு குளிர்ந்த கிளைகளையுடைய புதுநிழலிலேதங்கினாள்எனக்குறிப்பிடப்படுகின்றது. காலப்போக்கில் கண்ணகி வழிபாடு குளிர்ச்சியைத் தரும் வேப்பமரத்துடனும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்குச் சான்றாக ஈழத்தில் உள்ள கண்ணகி வழிபாட்டிலும் கதைகளிலும் வேப்பந்தழை பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம். ஈழத்தில் வழங்கிவரும் கண்ணகி கதைகளில் வழக்குரைக்கச் செல்லும் கண்ணகி ஒரு கையில் சிலம்பும் மற்றொரு கையில் வேப்பந்தழையும் எடுத்துச் செல்வதாகக் குறிப்பிடப்படுவதை,

***ஒரு கை குழைபிடித்து ஒருகை சிலம்பேந்தி***
***மதுரை நகர்தேடி வந்தமகா பத்தினியே***
***(2008:32)***

எனக் கண. ஆறுமுகம் கண்ணகை அம்மன் பிரார்த்தனையில் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் நீண்டகாலமாக வழங்கிவரும் கோவலன் கூத்தில்,

***தாவுமொரு காற்சிலம்பும் தனிவேப்பம்***
***பத்திரியும் தானே கொண்டு***
***மேவுமொரு தலை விரித்து கண்ணீர்வார***
***(2006:197)***

பாண்டியனை நோக்கி கண்ணகி செல்வதாக மயில்வாகனம் இரகுநாதன் குறிப்பிடுகிறார். சி.இராச்சிங்கம் தொகுத்தளித்துள்ள வற்றாப்பாளைக் கண்ணகி அம்மன் பனிச்சையாடிய பாடற்சிந்தில்

***செம்புநிறை தீர்த்தமதை மரத்திற் தெளித்து***
***சீரான வேப்பிலையை யதன்மீது சாத்தி***
***(2003:74)***

என வேம்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றார். ஈழத்தில் கண்ணகி கோயில்கள் எல்லாவற்றிலும் வேப்பந்தழை முக்கியத்துவம் பெற்றுள்ளன. தமிழகத்தில் கம்பம் பகுதியில் உள்ள மங்கள நாயகி கண்ணகி தேவி கோயிலில் வேப்பிலையைக் கையில்கொண்டு பெண்கள் சாமி ஆடுவதும் அம்மைநோய் நீங்குவதற்கு வழிபடுவதும் காணமுடிகின்றது.

## சிலம்பும் பொங்கல் வைத்தலும்

மாரியம்மன் விழாவில் பொங்கல் வைத்தலும், ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்திப்பாடுவதும் முக்கியமானசடங்காகும். தமிழகத்தில் மாரியம்மன் வழிபாட்டிலும் ஈழத்தில் கண்ணகி வழிபாட்டிலும் கேரளத்தில் பகவதி வழிபாட்டிலும் பூசாரி ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி பாடும் வழக்கம் உள்ளது. தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடு எனக் கூறவரும் ம.பொ.சி., **கண்ணகியின் புரட்சிக்குக் காரணமாய் அமைந்தது அவளது காற்சிலம்பேயாகும். ஆதலால் இன்றும் மாரியம்மன் திருவிழாக் காலங்களில் பண்டையக் காலத்தில் மகளிர் காலில் அணிந்தது போன்ற, உள்ளே பரல்கள் நிரப்பிய ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி ஆடிப்பாடிக் களிக்கின்றனர் பூசாரிகள்**
***(1958:39)***

என்று குறிப்பிடுகின்றனர். ஈழத்தில் மாரியம்மன் போன்று கேரளத்தில் கண்ணகியே பகவதியானாள். பகவதியம்மன் மீது வழங்கப்படும் கதைகள் எல்லாம் கண்ணகி வரலாற்றைக் குறிப்பிடுபவையாக இருக்கின்றன. கேரளத்தில் எல்லாப் பகவதி கோயில்களுக்கும் மூத்த பகவதியம்மன் கோயிலாக இருப்பது கொடுங்களூர் பகவதியம்மன் கோயிலே. கேரளாவில் உள்ள பகவதி கோயில்களில் மிகவும் புகழ்பெற்றதும் பழமையானதும் கொடுங்களூர் பகவதி கோயில் என்று வி.ஆர்.சந்திரன் (2005:7 குறிப்பிடுகின்றார்.

அவர் சேரனால் கண்ணகிக்கு எழுப்பப்பட்ட கோயில் கொடுங்களூரில் உள்ளதுதான் என்றும் குறிப்பிடுகின்றார். கேரளத்தில் பகவதி கோயில்கள் கண்ணகி கோயில்களின் உருமாறிய வடிவங்களே என்றும் கொடுங்களூர் பற்றிய தோற்றப் பாட்டுகளில் கண்ணகியைப் பற்றிய குறிப்புவரும் நல்லம்மத் தோற்றப்பாட்டு மிகவும் முக்கியமானது. இதிலுள்ள கதை ஏறத்தாழ கண்ணகி கதையே. கண்ணகி தன் கணவன் கொல்லப்பட்டபோது வெறிகொண்ட கொற்றவையாகவே மாறி மக்களிடம் அருள்வாக்குக் கூறி, அவர்களைத் திரட்டியபடிப் பாண்டிய மன்னனிடம் நீதிகேட்கச் சென்றாள். அந்த நிகழ்வே வெளிச்சப்பாட்டு சடங்காயிற்று. வெளிச்சப்பாடு காலில் ஒற்றைச் சிலம்பை அணிந்து தலைமயிரை விரித்துப்போட்டு உடலெங்கும் ரத்தம் வழிய வெறிகொண்டு ஆடி அருள்வாக்குக் கூறுவதாக அமைந்திருப்பதாக நெல்மாடி பி.நாராயணன் கூறுவதாக வி.ஆர்.சந்திரன் குறிப்பிடுகின்றார். இந்நிகழ்வு உக்கிரத்துடன் கண்ணகி சிலம்பைக் கையில் ஏந்தி வழக்குரைக்கச் சென்ற நிகழ்வை நினைவுபடுத்துவதாக உள்ளது. கொடுங்களூர் பகவதி அம்மன் கையில் ஒற்றைச் சிலம்பு அணிந்து கொண்டிருக்கிறார். மாரியம்மனுக்குப் பொங்கல் வைத்தல் போன்றே ஈழத்திலும் கேரளத்திலும் பொங்கல் வைத்தல் சடங்கு முக்கியத்துவம் பெறுகிறது. மழைபெய்து வளம்பெருகவும் நோய்கள் வராமல் இருக்கவும் இப்பொங்கல் வைக்கப்படுவதை எல்லாக் கண்ணகி, மாரியம்மன் கோயில்களிலும் காண்கின்றோம்.

தமிழக கேரள எல்லையில் உள்ள குமுளி மலையில் உள்ள கண்ணகி கோயிலில் வைகாசி மாதம் மட்டும் கண்ணகி கோயில் வழிபாடு நடைபெறுகிறது; பூசை செய்கின்றனர்; சடங்குகளுடன் உடுக்கடிக்கிறார்கள்; கண்ணகியைக் குளிர வைக்க குளிர்மைப் பொங்கல் வைக்கிறார்கள். வாழை, மா, பலா கலந்த பானத்தைப் பக்தர்களுக்குக் கொடுக்கின்றனர். இலங்கையில் கண்ணகி கோயில்களிலும் உடுக்குச் சிந்து பாடப்படுவது போல மாரியம்மனுக்கு உடுக்குப் பாட்டு பாடிவருவதைக் காண்கிறோம். மாரியம்மனுக்கும் கண்ணகிக்கும் உள்ள ஒப்புமைகளாக, மழை வேண்டுதல் அதற்காக நிகழ்த்தப்படும் சடங்குகள் வரை எல்லாவற்றிலும் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

நிலக்கோட்டைப் பகுதியில் உள்ள கண்ணகிக்குப் பொற்கொல்லரைப் பலியிட்டு வந்தனர் என்றும் பின்னர் பொற்கொல்லப் புலவர் ஒருவரின் வேண்டுதல் காரணமாகப் பொற்கொல்லர் ஒருவரின் முடியொன்றை அறுத்து ஒட்டும் பழக்கம் இருந்ததாகவும் மு.இராகவையங்கார் பத்தினி வணக்கம் எனும் கட்டுரையில் குறிப்பிடுவதாகத் தே.லூர்து (2000 353) குறிப்பிடுகின்றார். நிலக்கோட்டையில் இருந்த கண்ணகி வழிபாடே காலப்போக்கில் மாரியம்மன் வழிபாடாகவழங்கப்படுகிறது. மாரியம்மன் வழிபாடுகளில் முடியைக் காணிக்கையாகக் கொடுக்கும் நிகழ்வைப் இப்பின்புலத்தில் காண்பதும் அவசியமாகும்.

மாரியம்மன் கோயில்கள் ஊர்தோறும் இருப்பதற்கு பிடிமண் எடுத்துச் சென்று வேறிடங்களில் மாரியம்மனுக்குப் பிரதிட்டைச் செய்துவரும் வழக்கம் நாட்டார் மரபில் இருப்பதால்தான் சிறுகோயில்கள் எல்லாம் ஒரேமாதிரியான கோயில் வரலாற்றைக் கொண்டிருக்கின்றன. பிடிமண் எடுத்துச் சென்று வழிபடும் மரபு சிலம்பில் இருந்தே நாம் காண்கிறோம். கொங்கிளங்கோசன், கயவாகு போன்றோர் தங்களது நாட்டில் ஏற்படுத்திய் வழிப்பாட்டை இப்பின்புலத்தில் காண்பதும் அவசியமாகும். இதனை, **பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியன் சந்தனமரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு சிலம்பும் சந்தனமரப் பலகையால் செய்த பேழையில் வைத்து யானையில் மீதேற்றி வேதாரணியத்தில் கொண்டு வந்துவிட்டான். அங்கிருந்து கப்பலில் காரைத்தீவுக்கும் நீரிமலைக்குமிடையே உள்ள திருவடி நிலையில் இறக்கினார்கள். அங்கிருந்து யானை ஊர்வலமாகியப் பிட்டி வதியாய் அங்கணாமைக் கடவை வந்தது. அங்கே முதலாவது ஆராதனை நடத்தப் பட்டது. அங்கிருந்து நாவற்குழியை அடுத்துள்ள வேலம்பறை என்னுமிடத்திற்கு வைகாசிப் பூரனையன்று வந்து சேர்ந்தது. அங்கிருந்து ஈழத்தில் பல ஊர்களுக்கும் பரவியது. (1984:106)**

எனச் சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுவதாக இரா.வை.கனகரத்தினம் எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறு கண்ணகி வழிபாடே ஓரிடத்திலிருந்து பல இடங்களுக்கும் பரவியது.

கன்னனுர் மாரியம்மன் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஏழு மைல்கள் தொலையில் உள்ளது. இக்கோயில் தற்போது சமயபுரம் மாரியம்மன் என்று வழங்கப்படுகிறது. பாண்டியர்கள்படையெடுப்பால்கன்னனுர் கோட்டையும் நகரமும் அழிக்கப்பட்டது. திருவரங்கப் பகுதியில் உள்ள அரங்கநாதர் கோயிலில் இருந்த்த வைணவி என்ற மாரியம்மனை இசுலாமியப் படைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக அங்கிருந்து எடுத்துச் சென்று கங்க நாட்டு மன்னன், கோட்டை மேட்டில் வைத்து வழிபட்டான். பின்பு அக்கோயில் வழிபாடொழிந்து பிரபலமற்றிருந்தது. அத்தருணத்தில் திருச்சிராப்பள்ளி கோட்டையைக் கைப்பற்ற வடக்கே இருந்த விசயநகரப் பேரரசின் படைகள் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தன. படைவீரர்கள் கன்னனுர் மேட்டில் முகாமிட்டனர். அரண்மனை மேட்டில் விளங்கிய அன்னை மாரியை வணங்கி தென்னாட்டில் வெற்றிபெற்றதால் திருக்கோயில் கட்டி வழிபடுவதாக வேண்டிக் கொண்டனர். அப்போரில் வெற்றியும் பெற்றனர். அன்னை மாரிக்குக் கோயில் அமைத்துப் பூசைகள் செய்து வந்தனர். பின்னர் சூரப்ப நாயக்கர் என்பவர் பழைய திருவுருவத்திற்குப் பதிலாகப் புதியதோர் திருவுருவம் செய்து வைத்தார் என வரலாறு வழங்கப்படுவதாக ஆ.தசரதன் (2006:முன்:32) குறிப்பிடுகின்றார். இதன் ஊடாகக் காலந்தோறும் மாரியம்மன் அடைந்து வந்துள்ள மாற்றத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

மாரியம்மன் கோயில்களில் நடைபெறும் கொடை விழாவிற்குப் புனிதநீர் நிலைகளில் அல்லது அருவி சுனைகளிலிருந்து தீர்த்தம் கொண்டு வருபவரை வரவேற்று மேளதாள ஊர்வலத்துடன்அழைத்துவந்து மாரியம்மன் கோயிலில் உள்ள மாரியம்மன் பீடத்தின் மீது தீர்த்தக் குடத்தை இறக்கி வைப்பர். அதன் பிறகு கொடை விழா தொடங்கும். ஈழத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டிலும் இதேநிலை மேற்கொள்ளப்படுவதை வன்னிப்பிரதேசத்தில் உள்ள முள்ளியவளை, வற்றாப்பாளை கண்ணகி அம்மன் கோயில்களில் காணலாம்.

வைகாசி விசாகத்தில் நடைபெறும் கண்ணகி விழாவிற்குப் பொங்கல் குழுவினர் முள்ளியவளையில் இருந்து ஊர்வலமாகச் சென்று சுமார் ஆறுமைல் தொலைவில் உள்ள சிலாவத்தை என்னும் கடற்கரைக்

கிராமத்தில் கண்ணகி கோயிலின் முன்பாக உள்ள கடலில் உப்புநீரை அள்ளி வருகின்றனர். சிலாவத்தையிலிருந்து இப்புனித தீர்த்தம் கொண்டு வரப்படும்போது மக்கள் வீதியெங்கும் பூரண கும்பம் வைத்து வழிபடுவர். இவ்வாறு கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தம் கண்ணகியின் வழிபாட்டிடத்தில் வைக்கப்படும். தொடர்ந்து நடைபெறும் விசேட வழிபாடுகளின்போது இத்தீர்த்தம் விளக்கெரிக்கப் பயன்படுத்தப்படும் (2006: முன்:12) என மயில்வாகனம் இரகுநாதன் குறிப்பிடுகின்றனர்.

### கண்ணகியும் மழையும்

ஈழத்தில் கண்ணகை அம்மன் கோயில்கள் (ஈழத்தில் கண்ணகியைக் கண்ணகை அம்மனாகவே குறிப்பிடுகின்றனர்) எல்லாவற்றிலும் மழையை வழங்கும்படி வேண்டிக்கொள்வதைக் காணமுடிகின்றது. மழைக்காகவே கண்ணகியின் மீது பாடப் பட்ட பாடல்கள் மிகுதியாக அமைந்திருக்கின்றன. கண்ணகை அம்மன் வழிபாட்டில் நிகழ்த்தப்படும் கொம்பு விளையாட்டு, வசந்தன் பாடல், குன்றக்குரவை போன்றவை அனைத்தும் மழையை முதன்மைப்படுத்தியே பாடப்பட்டவை என்பதும் கவனிக்க வேண்டியவை. மழைக்காவியம் என்ற பெயரில் கண்ணகை அம்மனைப் பாடும் பாடல்களாக அமைந்திருப்பதைப் பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக்காவியம், கன்னன்குடா கண்ணகை அம்மன் மழைக்காவியம், செட்டிப்பாளையம் கண்ணகை அம்மன் மழைக்காவியம், தம்பிலுவில் கண்ணகி அம்மன் மழைக் காவியம் என்று கண்ணகை அம்மனை மழைத் தெய்வமாகப் பாடப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. பிற வடிவங்களாக உள்ள சிந்து, அகவல், விருத்தம், காவியம் என எல்லாவற்றிலும் கண்ணகை அம்மனை வழிபடுதலின் நோக்கம் என்பதும் மழைக்காகவே அமைந்திருக்கின்றன. கண. ஆறுமுகம் குறிப்பிடும் கண்ணகை அம்மன் குளுத்திப் பாடலில்,

> **சித்தர் குலந்தனைத் தீர்த்த அந்தச்**
> **சிவகாமி அபிராமி வந்தாள் வந்தாள்**
> **வந்தாள் கண்ணகை வந்தாள்**
> **மழைமாரி பொழிந்திட வந்தாள் வந்தாள்**
> **(2008:7)**

என்று கண்ணகியைப் போற்றிக் குரவை பாடுவதைக் காணமுடிகின்றது. வி.சீ.கந்தையா பதிப்பித்த கண்ணகை அம்மன் ஊர்ச்சுற்று காவியத்திலும் மழைபெய்து விளைநெல் விளைச்சல் பெருக வேண்டும் (1968:422) என்று வேண்டிக்கொள்வதையும் காணலாம்.

கேரளத்தில் பகவதியம்மன் வழிபாடும் மழைவேண்டியும் நோய்கள் வராமல் இருக்கவும் கொண்டாடப்படுகின்றது. ஆற்றங்கால் பகவதியம்மன் கோயிலில் சிலப்பதிகாரக் கதை நிகழ்வுகள், கதைச் சிறப்புகள் அமைந்துள்ளன என்று எஸ்.பத்மநாபன்(2005:37)குறிப்பிடுகின்றார். இக்கோயிலில் நடைபெறும் பொங்கல் விழாவிற்கு இலட்சக்கணக்கான பெண்கள் வருகின்றனர். மழைவேண்டி பொங்கல் வைத்து வழிபடுவதை இன்றுவரையிலும் காணமுடிகின்றது.

### மாரியம்மன் வழிபாடு - கண்ணகி வழிபாடே

சிலப்பதிகாரச் சிறப்பைத் தமிழகமெங்கும் பரப்புதலைக் கொள்கையாகக் கொண்டிருந்த ம.பொ.சி., மாரியம்மன் வழிபாட்டைக் கண்ணகி வழிபாடே என்று உறுதியாகக் குறிப்பிட்டதுடன் அதற்கான காரணங்களையும் முன்வைத்தார். கண்ணகி வழிபாடே தற்போது மாரியம்மன் வழிபாடாக மாற்றமடைந்து இருக்கின்றது என்ற முடிவுக்கு வந்தார். மேலும் மாரியம்மன் வழிபாட்டைக் கண்ணகி வழிபாடாகக் கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்தார். கண்ணகி வழிபாடு மாரியம்மன் வழிபாடென்று குறிப்பிடுவதற்கு ம.பொ.சி., கூறும் காரணங்களாக அமைந்திருப்பவற்றைக் காண்பதும் அவசியமானது.

சிலம்பில் உரைபெறு கட்டுரையில் மதுரை அழிந்தது முதற்கொண்டு பாண்டிய நாட்டில் மழைவளமின்றி வெப்பும் குருகும் தொடர கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியனால் கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று விழாவெடுக்கப்பட்டதாகவும் அதன் பின்னரே நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது (சிலம்பு; உரைபெறு; கட்டுரை) என்று குறிப்பிடுகின்றது. இக்கருத்தைச் சுட்டிக்காட்டி, மாரியம்மன் வழிபாடு ஆடிமாதம் நடைபெறுவதால் கண்ணகி மதுரையை எரித்ததும் ஆடிமாதமே என்பதால் இம்மாதத்தில் கொண்டாடப்படுவதாகக் குறிப்பிட்டார். மழையை வேண்டி பிற்காலத்தில் கொண்டாடப்பட்டதால் கண்ணகி வழிபாடு மாரிவிழாவாக மாறியிருக்கும் (1958:38) என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் ம.பொ.சி., குறிப்பிடும்போது, **- வெற்றிவேற் செழியனால் உயிர்ப்பலி கொடுக்கப்பட்டதைப் போன்று மாரியம்மனுக்கு ஆடு, கோழி பலியிடுதல் வழக்கம் உள்ளது. - கண்ணகியின் காலில் கிடந்த ஒற்றைச் சிலம்பை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் மாரியம்மன் விழாக் காலங்களில் ஒன்றைச் சிலம்பை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் மாரியம்மன் விழாக் காலங்களில் ஒன்றைச் சிலம்பைக் கையில் ஏந்தி பூசாரிகள் பாடியாடும் நிலையைக் காணலாம். - கண்ணகி போற்றிய ஏழு கன்னியரை நினைவுபடுத்தும் நோக்கில் மாரியம்மன் கோயிலில் இடப்புறத்தில் இருக்கும் ஏழு சிலைகள் உள்ளன. இக்காரணங்களால் மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடே என்று துணிகின்றார். (இதுபோன்றே வற்றாப்பாளைக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் சிலம்புகூறல் ஏழுநாட்கள் பாடப்படுவதும் (2003:18) கவனிக்கத்தக்கது.)**

கண்ணகி வழிபாடு மாரியம்மன் வழிபாடாக மாற்றமடைந்திருப்பதாக ம.பொ.சி., குறிப்பிட்ட காலகட்டத்திலேயே மு.ஆரோக்கியசாமியும் மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாட்டிலிருந்தே வந்தது எனப் பல சான்றுகள் காட்டி நிறுவ முயன்று இருக்கின்றார் (2001:247) எனக் க.கைலாசபதி குறிப்பிடுகிறார். தமிழகத்தில் கண்ணகி வழிபாடு மாரி அம்மன் வழிபாடாச் சில பகுதிகளில் மாற்றம் பெற்றதாகக் கூறும் ஆரோக்கியசாமி அதற்குச் சான்றாக இருகோயில்களை அடையாளம் காட்டுகின்றார். ஒன்று கோபிச்செட்டிப் பாளையத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் பேரியூரில் குடிகொண்டுள்ள கொண்டத்துக் காளி, அடுத்து பன்னாரி-மைசூர் சாலையில் கோயில் கொண்டுள்ள மாரி அம்மன். இவை இரண்டும் கண்ணகி கோயில்கள் என்று குறிப்பிடுகின்றார். இக்கோயில்களில் தீ மிதிப்பு நடைபெறுவதோடு கண்ணகி அம்மன் பற்றிய பாடல்கள் பாடப்படுவதாகவும் (2007;110) ஆரோக்கியசாமி குறிப்பிடுவதாகச் சந்தனா நல்லலிங்கம் எடுத்துக்காட்டுகின்றார். மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடு தான் என்பதற்கு ஈழத்தில் நிகழும் கண்ணகி வழிபாடு மழைவேண்டியும் வெப்பு, குருகு போன்ற நோய்கள் வராமல் காக்கவும் கொண்டாடப்படுவதாக அமைந்திருப்பதையும் ம.பொ.சி., சுட்டிக் காட்டியிருந்தார் (1958:338) இவரது கருத்தையே செந்துரைமுத்து (1961:94), சந்தனா நல்லிங்கம் (2007:112) போன்றோரும் குறிப்பிட்டிருந்தனர். இன்று விழா நடைபெறும் மாரியம்மன் கோயில்கள் எல்லாம் கண்ணகி கோயில்களே என்று மு.வை.அரவிந்தன் (1977:232) குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் கண்ணகி வழிபாடு ஈழத்திற்குச் சென்றதையும் கொம்பு விளையாட்டு, குரவை போன்ற கண்ணகி விழாவில் நடத்தப்படும் நிகழ்வையும் சுட்டிக் காட்டி, கண்ணகி வழிபாடு மழைக்குரிய வழிபாடாகவே குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தில் இன்று கண்ணகி வழிபாடு இல்லாமல் போனதற்கும் அது மாரியம்மன் வழிபாடாக உருமாறியப் போய் நிற்பதாகக் குறிப்பிடுகிறார் பக்தவசலபாரதி. ஈழத்தில் கண்ணகி கோயில்கள் உள்ளன. வழிபாடு உயிர்ப்புடன் இன்று காணப்படுகின்றது. குறிப்பாக மட்டக்களப்பில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட கண்ணகி வழிபாடு வன்னிவள நாட்டில் கண்ணகி வழிபாடு உன்னதமான வழிபாடாக இருக்கிறது. முல்லைத்தீவு, புத்தளம், வவுனியா, கிளி நொச்சி மாவட்டங்களில் கண்ணகி வழிபாடு மிக முக்கியமானதாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்ணகி வழிபாடு சமஸ்கிருத நெறிமுறைக்குள் வந்துவிட்டதை மாணவர்களுடனான களப்பயணத்தின் வழியே அறிந்துகொண்டேன். புத்தூர் கிழக்குக் கண்ணகை அம்மன் இராஜராஜேஸ்வரி சமஸ்கிருத மயமாக்கப்பட்டுவிட்டார் என்று (காலச்சுவடு:அக்:2011) குறிப்பிடுகிறார். கண்ணகி கோயில்களை இராஜராஜேஸ்வரி கோயிலாக மாற்றம் செய்தவர்களில் ஆறுமுக நாவலருக்கு முக்கியப் பங்குண்டு. அவ்வாறு மாற்றமடைந்தபோதும் கண்ணகி வழிபாடு ஈழத்தில் சிறப்புடனே விளங்குகின்றது.

உடல்நலம் தரும் இறைவி மாரியம்மன் அம்மை, காலரா போன்ற தொற்று நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுபவள். புகழ்பெற்ற மாரியம்மன் கோயில்களான சமயபுரம், கொன்னையூர் (புதுக்கோட்டை), கண்ணாத்தாள் கோயில்நாட்டரசன் கோட்டை, உப்பிலியபாளையம், பெரியபாயைம் போன்றவை சிலப்பதிகாரக் கதையின் தலைவியான கண்ணகியுடன் தொடர்புடையன. சிலப்பதிகாரக் கதையின் தலைவியான கண்ணகியுடன் தொடர்புடையன (1975:61) என்று சோமலெ குறிப்பிட்டு இருந்தார். கண்ணகி வழிபாடு மாரியம்மன் வழிபாடாக முன்னெடுத்தவர்களில் ம.பொ.சி., க்குப் பிறகு கண்ணகி வழிபாடு குறித்து கண்ணகி கதைகளின் வழியாக ஆய்வினை மேற்கொண்ட சரளா இராசகோபாலன், மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடுதான் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார். இவர் கண்ணகிக்கு ஆடி மாதத்தில் பாண்டிய நாடு, கொங்கிளங்கோசர் நாடு, சோழநாடு, கடல்சூழ் இலங்கை ஆகிய நாடுகளில் விழா எடுத்ததால் மழைபெய்து வறுமை நீங்கியது. இதனால் கண்ணகி வழிபாடு பரவியது (2003:315) என்கிறார். கண்ணகியே மாரியம்மன் ஆனாள் என்ற முடிவுக்கு வருகின்றார்.

மாரியம்மன் கோயிலில் நடைபெறும் தீ மிதித்தலையும் மதுரையை எரித்த தீ நல்லவர்களைச் சுடாது என்ற கண்ணகி வரலாற்றையும் நினைவுப்படுத்தும் செயல் என்றே பலரும் கருதுகின்றனர் என்று பகீரதன் (1998:34) குறிப்பிடுகின்றார். மாரியம்மன் என்றும் மாகாளி ஆத்தாள் என்றும் கிராம மக்கள் தமிழ் நாட்டில் போற்றும் தெய்வம் பத்தினித் தெய்வமான கண்ணகிதான் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மாரியம்மனுக்கு வழங்கப்படும் பெயர்களைக் காட்டிலும் கண்ணகிக்கு வழங்கப்படும் பெயர்கள் அதிகம். கண்ணகியை மங்கலதேவி, பத்தினித்தெய்வம், மாரியம்மன், செல்லாத்தம்மன், செல்லியாயி, சோணியம்மாய், மாரியம்மாள், பத்தினி அம்மன், நாச்சியாரம்மன், பகவதியம்மன், ஸ்ரீபூரணி, விரம்மா, வீராயி, ஒற்றை முலைச்சி எனக் கண்ணகி மாரியம்மனாக மட்டுமின்றி ஏனைய நாட்டார் பெண்தெய்வ வழிபாட்டிலும் கலந்திருப்பதாகச் சி.கோவிந்தராசனார் (1991:141) குறிப்பிடுகின்றார். திருநெல்வேலி பகுதியில் உள்ள கொற்கையிலும் பிற இடங்களிலும் வெற்றி வேலம்மன் என்ற அம்மன் கோயிலுண்டு.

இந்த அம்மன் செழிய நங்கை என்றும் சொல்லப்படுகிறாள். இக்கோயிலும் கண்ணகி கோயிலே என்று மா.இராசமாணிக்கனார் கூறுவதாக (1986:47) எஸ்ஜியார் குறிப்பிடுகின்றார். கண்ணகி கதைகள் குறித்து ஆராய்ந்த் சா.சிவமணியும் மாரியம்மன் வழிபாட்டைக் கண்ணகி வழிபாடாகவே காண்கின்றார். கண்ணகி வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் மு.வரதராசனும் மாரியம்மனுக்கும் கண்ணகிக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டிக்காட்டி, காளியே கண்ணகியாகப் பிறந்தாள் என்று பிற்காலத்தில் கதை கட்டப்பட்டது (2000:89) எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகவும் தமிழர் வழிபாடாகவும் உள்ள கண்ணகி வழிபாடே இன்று மாரியம்மன் வழிபாடாகக் கொண்டாடப்படுகின்றது. மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடேயன்றி ரேணுகாதேவி வழிபாடு இல்லை என்பதும் வைதிகச் சமயத்தின் பரவலாக்கமும் மாரியம்மன் வழிபாட்டைத் தங்களது சமயத்தோடு இணைக்கும் முயற்சியின் வெளிபாடாகவே இதனைக்காணவேண்டியுள்ளது. ஈழத்தில் கண்ணகை அம்மனாகவும், கேரளத்தில் பகவதியம்மனாகவும் கண்ணகி வழிபாடு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பிறந்து வளர்ந்து தெய்வமான கண்ணகி மூவேந்தராலும் வணங்கப்பட்டாள். அப்படிப்பட்ட கண்ணகி வழிபாடு தமிழகத்தில் இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை. தமிழகமெங்கும் நிலவும் மாரியம்மன் வழிபாடு, கண்ணகி வழிபாடே என்பதற்கு இவ்விரண்டுக்குமுள்ள தொடர்புகள், சடங்குகள் வழி அறிகின்றோம்.

## பார்வை நூல்கள்


1. அப்துல் காதர். (2006). *அயல் மகரந்தச் சேர்க்கை*. புதிய காற்று (மாத இதழ்), ஜூலை.
2. அரவிந்தன், மு. வை. (1977). *தமிழக நாட்டுப்பாடல்கள்*. சென்னை, லட்சுமி பதிப்பகம்.
3. ஆறுமுகம், கண. (2008). *கண்ணகை பத்ததியும் பாடல்களும்*. சண் அச்சகம், இருதயபுரம், மட்டக்களப்பு இலங்கை.
4. இராமசாமி துளசி. (1987). *மங்கலதேவி கண்ணகி கோட்டம்*. சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
5. எஸ்ஜியார். (1986). *திருநெல்வேலிப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு*, மதுரை, காமராசர் பல்கலைக்கழகம்.
6. கந்தையா, வி.சீ. பதிப்பு:(1968). *கண்ணகி வழக்குரை*. காரைத்தீவு இந்து சமய விருத்திச் சங்கம், காரை தீவு, மட்டக்களப்பு இலங்கை.
7. *கலைக்களஞ்சியம் (தொகுதி 8)*. (1956). தமிழ் வளர்ச்சி கழகம், சென்னை.
8. கனகரத்தினம், இரா. வை. (1984). *ஈழநாட்டிற் கண்ணகி வழிபாடு- ஓர் ஆய்வு*. தமிழியல் (தொகுதி-25), சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.
9. கைலாசபதி, க. (1966). *பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்*, சென்னை, பாரி நிலையம். கைலாசபதி, க. (2001). *அடியும் முடியும், இரண்டாம் பதிப்பு*. சென்னை, குமரன் பப்ளிகேஷன்ஸ்.
10. கோவிந்தராசனார், சி. (1991). *கண்ணகியார் அடிச்சுவட்டில்*. மதுரை. காமராஜர் பல்கலைக்கழகம்
11. சந்தனா நல்லலிங்கம். (2007). *இளங்கோவின் பத்தினித் தெய்வ படைப்பு*, சென்னை, காந்தளகம்.
12. சந்திரன், வி. ஆர். (2005). *கொடுங்கோளூர் கண்ணகி (தமிழில் ஜெயமோகன்)*, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை.
13. சரளா ராஜகோபாலன். (2003). *கண்ணகி வழிபாடு*. சென்னை, ஒளிப் பதிப்பகம்.

14. சாமிநாதையர், உவே. (1944). *சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதையும் அடியார்க்கு நல்லுரையும், நான்காம் பதிப்பு*. சென்னை, கபீர் அச்சுக்கூடம்.
15. சிவஞானம், ம. பொ. (1958). *வீரக் கண்ணகி*, சென்னை, இன்ப நிலையம்.
16. சென்னியப்பன், ந. இரா. (2012). *கொங்குநாட்டில் கண்ணகி வழிபாடு*. இணையதளக் கட்டுரை.
17. செந்துரைமுத்து. (1977). *சிலம்பில் மக்கள் குரல்*. சென்னை நல்வாழ்வு பதிப்பகம்.
18. சோமலே. (1975). *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்*. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.
19. தசரதன், ஆ. (2006). *மாரியம்மன் கதைப்பாடல். இரண்டாம் பதிப்பு*. சென்னை, தமிழ் ஒலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்.
20. *தமிழ் லெக்சிகன் தொகுதி 5*, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. பதிப்பு- 1982.
21. பக்தவச்சல பாரதி. (2011). *யாழ்ப்பாணத்து நினைவுகள்*, காலச்சுவடு இதழ், அக்.
22. பகீரதன். (1998). *சக்தி வழிபாடு*, சென்னை, வானதிப் பதிப்பகம்.
23. பத்மநாபன், எஸ். (2005). *கேரளத்தில் கண்ணகி கோயில்கள்*, மார்ச். கேரளப் பல்கலைக்கழக கருத்தரங்கு காரியவட்டம்.
24. புகழேந்திப்புலவர். (1966). *பெரிய எழுத்து கோவிலன் கதை, பதிப்பு*. பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, திருமகள் விலாச அச்சகம்.
25. மயில்வாகனம் இரகுநாதன், (2006). *கோவலன் நாடகம் (முல்லைமோடி)*, எஸ்.எஸ். ஆர் பிரிண்டர்ஸ், ஜாப்னா.
26. மாதையன், பெ. (2001). *வரலாற்று நோக்கில் சங்க இலக்கிய பழமரபுக் கதைகளும் தொன்மங்களும்*, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
27. வடிவேலன், இரா. (2002). *பேரொடு மாரியம்மன் செல்லியம்மன் தெய்வத் தமிழ்மாலை*, அமுத நிலையம், ஈரோடு.
28. வரதராசன். மு. (2000). *தமிழ் இலக்கிய வரலாறு*. சாகித்திய அக்காதெமி, சென்னை.
29. வானமாமலை. நா, (2008). *பழங்கதைகளும் பழமொழிகளும்*, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
30. வையாபுரிப்பிள்ளை, எஸ். (1967). *சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்)* சென்னை, பாரிநிலையம்.
31. லூர்து, தே. (2000). *நாட்டார் வழக்காற்றியல். சில அடிப்படைகள்*, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.
32. ஹேமா சண்முக சர்மா (பதிப்பு). வற்றாபாளைக் கண்ணகை அம்மன் கோயிற்பரிபாலன சபை, இலங்கை.
33. Clam Arockiasamy, M.*The cult of Mariamma of the Goddess of Rain*, Tamil culture, April,1953.